# தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை

## பெருந்தொழில்

### மானியக் கோரிக்கை எண். 27

## அறிவிப்புகள்
## 2023 -2024


**தங்கம் தென்னரசு**
தொழில் துறை அமைச்சர்

## 1) தமிழ்நாட்டில் ஒரு மேம்பட்ட உற்பத்தி மையம் நிறுவப்படும்.

தமிழ்நாட்டில் ஒரு மேம்பட்ட உற்பத்தி மையம் அமைத்திடுவதற்காக, வழிகாட்டி நிறுவனம், உலகப் பொருளாதார மன்றத்துடன் (World Economic Forum) ஒரு நிறுவன ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. இதன் பலனாக, டாவோஸில் 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற உலகப் பொருளாதார மன்ற வருடாந்திர சந்திப்பிற்கு அழைப்பு வரப்பெற்று, உரையாற்றுவதற்கும் வாய்ப்பு கிடைத்தது. இந்தியா முழுவதும் உள்ள அனைத்து தொழிலகங்களும், மேம்பட்ட உற்பத்தியை நோக்கிய தங்களது வளர்ச்சியை விரைவுபடுத்திடவும், உலகளாவிய உற்பத்தி சமூகத்தினை தமிழ்நாட்டிற்கு ஈர்த்திடவும், தமிழ்நாட்டில் ஒரு மேம்பட்ட உற்பத்தி மையம் நிறுவப்படும். வழிகாட்டி நிறுவனம் இந்த மையத்தின் மேம்பட்ட உற்பத்தி மற்றும் மதிப்புச் சங்கிலி (AMVC) தளத்தின் செயல்பாட்டுப் பிரிவாக இயங்கும். உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024ன் போது, இந்த மையத்தை துவக்க / செயல்படுத்த தமிழ்நாடு அரசு முயற்சிகள் மேற்கொள்ளும்.

## 2) ஒழுங்குமுறைச் செலவினங்களைக் குறைப்பதன் மூலம் வணிகம் புரிதல் எளிதாக்கப்படும்.

வணிகம் புரிதலை எளிதாக்கும் சூழலை மேம்படுத்திட வேண்டுமெனில், ஒழுங்குமுறை இணக்கச் செலவுகளைக் குறைப்பது மிகவும் அவசியமாகிறது. நிர்வாக மற்றும் நிதிச் சுமைகளை குறைத்திடும் வகையில் இதற்கென ஒரு வழிமுறை வடிவமைக்கப்படும். ஒழுங்குமுறைச் செலவினங்களைக் குறைக்கும் நோக்கம், செயல்முறைகளை எளிமைப்படுத்துதல் ஆகியவற்றின் அடிப்படையில், சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். இதன் மூலம், வணிகம் புரிதலை எளிதாக்கும் தரவரிசையில், மாநிலத்தின் நிலையை மேலும் வலுப்படுத்திட இயலும்.

3) சிப்காட் சூளகிரி தொழிற்பூங்காவில் தொழிலாளர்கள் மற்றும் பயிற்சி பெறுநர்கள் பயன்பாட்டிற்காக 6 0 0 படுக்கைகள் கொண்ட தங்குமிடம் 30 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், சூளகிரி தொழிற்பூங்காவில் அமையவுள்ள தொழிற்சாலைகளின் தொழிலாளர்கள் மற்றும் திறன் மேம்பாட்டு மையத்தின் பயிற்சி பெறுநர்கள் தங்குமிட தேவையைப் பூர்த்தி செய்யும்பொருட்டு, 30 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் 600 படுக்கை வசதிகள் கொண்ட ஒரு தங்குமிடம் அமைக்கப்படும்.

4) சிப்காட் - இருங்காட்டுக் கோட்டை தொழிற்பூங்கா மற்றும் செய்யாறு தொழிற்பூங்காக்களில், தொழிலாளர்களின் தங்குமிட தேவையை பூர்த்தி செய்ய தலா 200 படுக்கை வசதிகள் கொண்ட இரண்டு தங்குமிடங்கள் மொத்தம் 20 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

சிப்காட் - இருங்காட்டுக்கோட்டை தொழிற்பூங்கா மற்றும் செய்யாறு தொழிற்பூங்காக்களில் உள்ள தொழிலாளர்களின் தங்குமிட தேவையை பூர்த்தி செய்வதற்காக, தலா 200 படுக்கை வசதிகள் கொண்ட இரண்டு தங்குமிடங்கள் மொத்தம் 20 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

5) சிப்காட் தொழிற்பூங்காக்களில் ஸ்மார்ட் நீர் அளவீட்டு அமைப்புகள் (Smart Water Metering system) 20 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

சிப்காட் நிறுவனம் திருப்பெரும்புதூர் பகுதியில் அமைந்துள்ள அதன் 5 தொழிற்பூங்காக்களில், ஸ்மார்ட்நீர் அளவீட்டுமானியை பொருத்துதல், மென்பொருள் தொழில்நுட்பம் மூலம் கண்காணிப்பு மற்றும் பயன்பாட்டு கட்டணம் வசூலித்தல் போன்ற செயல்பாடுகளை உள்ளடக்கிய ஸ்மார்ட் நீர் அளவீட்டு அமைப்பை ஏற்கனவே நிறுவியுள்ளது. சிப்காட் நிறுவனம், நீர் பயன்பாட்டை சிறப்பாக கண்காணிக்கவும், நீர் விரயத்தை கட்டுப்படுத்தவும், மேலும் 14 தொழிற்பூங்காக்களில் 20 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் ஸ்மார்ட் நீர் அளவீட்டு அமைப்புகளை உருவாக்கும்.

6) மணப்பாறை, தேனி, திண்டிவனம் மற்றும் சூளகிரி ஆகிய சிப்காட்டின் 4 புதிய தொழிற்பூங்காக்களில், 5 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், ஒரு இலட்சம் மரக்கன்றுகள் நடவு செய்யப்படும்.

சிப்காட் நிறுவனம், திருச்சி மாவட்டத்தில் மணப்பாறை, தேனி மாவட்டத்தில் தேனி, விழுப்புரம் மாவட்டத்தில் திண்டிவனம் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சூளகிரி ஆகிய 4 புதிய தொழிற்பூங்காக்களை உருவாக்கியுள்ளது. இந்த 4 தொழிற்பூங்காக்களில், பசுமைவளத்தை மேம்படுத்த, 5 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், ஒரு இலட்சம் மரக்கன்றுகள் நடவு செய்யப்படும்.

7) விருதுநகர், சூளகிரி மற்றும் தேனி ஆகிய சிப்காட் தொழிற்பூங்காக்களில் 4.50 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் நிருவாக அலுவலக வளாகம் கட்டப்படும்.

சிப்காட் நிறுவனம், விருதுநகர், சூளகிரி மற்றும் தேனி ஆகிய புதிய தொழிற்பூங்காக்களில் 4.50 கோடி ரூபாய் மொத்த திட்ட மதிப்பீட்டில் நிருவாக அலுவலக வளாக கட்டடம் மற்றும் அதனைச் சார்ந்த வசதிகள் ஏற்படுத்தப்படும்.

8) மறுசுழற்சி முறையில் பெறப்படும் நீரினைக் கொண்டு ஒன்பது சிப்காட் தொழிற்பூங்காக்களின் தொழில் நீர் தேவையை பூர்த்தி செய்ய, 1.20 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் விரிவான சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்படும்.

சிப்காட் நிறுவனம், குமாரலிங்கபுரம், வெம்பூர், அல்லிக்குளம், தூத்துக்குடி, இலுப்பைக்குடி, இராணிப்பேட்டை, பனப்பாக்கம், மணப்பாறை மற்றும் திண்டிவனம் ஆகிய ஒன்பது தொழிற்பூங்காக்களின் தொழில் நீர் தேவையைப் பூர்த்தி செய்ய, இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரினைக் கொண்டு, மூன்றாம் நிலை எதிர்சவ்வூடு பரவுதல் வாயிலாக மறுசுழற்சி முறையில் பயன்படுத்திட, 1.20 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் விரிவான சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்படும்.

9) சிப்காட் நிறுவனம், 9 0 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில், ஆவணங்களை டிஜிட்டல் மயமாக்கி, ஆவண மேலாண்மை அமைப்பு (Document Management System) ஏற்படுத்தப்படும்.

சிப்காட் நிறுவனத்தில், ஆவணங்களை திறம்பட கையாளவும், துரிதமாக மீட்டெடுக்கவும், பணிமுறையினை சிறப்பாக்கவும், பாதுகாப்பை அதிகரிக்கவும், செலவினத்தைக் குறைக்கவும், 9 0 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் ஆவணங்களை டிஜிட்டல் மயமாக்கி, ஆவண மேலாண்மை அமைப்பு (Document Management System) ஏற்படுத்தப்படும்.

10) சிப்காட் நிறுவனம், 3,000 ஏக்கர் நிலப்பரப்பிற்கு, 25 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் புவியியல் தகவல் முறைமை வரைபடம் (GIS Mapping) ஏற்படுத்தப்படும்.

சிப்காட் நிறுவனம், 21 சிப்காட் தொழில் பூங்காக்களில் உள்ள 31,331 ஏக்கர் நிலப்பரப்பிற்கு புவியியல் தகவல் முறைமை வரைபடத்தினை (GIS Mapping) ஏற்கனவே ஏற்படுத்தியுள்ளது. மேலும் 3,000 ஏக்கர் நிலப்பரப்பிற்கு, 25 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் புவியியல் தகவல் முறைமை வரைபடம் (GIS Mapping) ஏற்படுத்தப்படும்.

11) திருவள்ளூர் மாவட்டம் காரணியில் சுமார் 3,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் சுமார் 250 ஏக்கர் பரப்பளவில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதுகாப்புத்துறை சார்ந்த மின்னணுவியல் மற்றும் பாதுகாப்பு தொழில் பூங்கா டிட்கோ நிறுவனத்தால் அமைக்கப்படும்.

தொழில் துறையில் மேம்பட்டுள்ள தமிழ்நாட்டில், பாதுகாப்புத்துறை சார்ந்த மின்னணுவியல் (Strategic Electronics) மற்றும் ஆளில்லா விமானங்கள் (Drones) தயாரிப்பிலும் ஏற்றம்பெற ஏதுவான தொழில் சூழல் நிலவுகிறது. இதற்குக் காரணம், இங்குள்ள தொழில் நிறுவனங்கள், மின்னணு உபகரணத் தயாரிப்பு (Electronics Manufacturing) மற்றும் துல்லியப் பொறியியலில் (Precision engineering) அதிக முன்னேற்றம் கண்டுள்ளதே ஆகும். மேலும், இந்தத் துறைகள் சமீபத்திய ஆண்டுகளில் அதிவேக வளர்ச்சி அடைந்து வருகின்றன.

ஒன்றிய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (MeitY), 2026 ஆம் ஆண்டிற்குள் இந்தியா இத்துறைகளில் முறையே ரூ.8 இலட்சம் கோடி மற்றும் ரூ.20,000 கோடி அளவிற்கு வளர்ச்சி அடையும் என மதிப்பிட்டுள்ளது. இந்த துறைகளில் தமிழ்நாடு மேலும் மேம்பட, உலகத் தரம் வாய்ந்த சோதனை வசதிகளை (Testing Facilities) நிறுவும் பணியில் டிட்கோ ஈடுபட்டுள்ளது. இதற்காக திருவள்ளூர் மாவட்டம் காரணியில், சுமார் 250 ஏக்கர் பரப்பளவில், இத்துறைகளில் ஈடுபடும் உற்பத்தியாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்களுக்கு உதவும் வகையில், தொழில் பூங்காவை டிட்கோ அமைக்க உள்ளது. இங்கு தயாரிக்கப்படும் மின்னணு பொருட்கள் மற்றும் ஆளில்லா விமானங்களை (Drones), அருகிலேயே உள்ள வல்லம்-வடகால் தொழிற்பேட்டையில் அமைக்கப்படவுள்ள சோதனை மையங்களில் திறனாய்வு செய்ய இயலும். இத்திட்டத்தில் சுமார் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பூங்கா அமைப்பதன் மூலம், சுமார் 3,000 பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

12) நகரங்களுக்கு இடையேயான வான்வெளி பயணத்திற்கு ஹெலிகாப்டர்களைப் பயன்படுத்த உதவும் வகையில், தமிழ்நாடு வான்வழி இணைப்புத் திட்டத்திற்கான (TNREACH) வழிமுறை வகுக்கப்படும்.

இந்தியாவிலேயே, தமிழ்நாடு மிகவும் நகரமயமாக்கப்பட்ட மாநிலமாகும். நம் மாநிலத்தின் பொருளாதார மேம்பாட்டில் வணிகப் பயணம் மற்றும் மருத்துவம், பொழுதுபோக்கு, சுற்றுலா போன்ற பயணங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. தமிழ்நாடு, நல்ல சாலை மற்றும் இரயில் இணைப்புகளை கொண்டிருந்தாலும், விமான இணைப்பு வசதி தற்போது சென்னை, கோவை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் தூத்துக்குடி ஆகிய 5 நகரங்களில் மட்டுமே உள்ளது.

நகரங்களுக்கு இடையேயான வான்வெளி பயணத்திற்கு ஹெலிகாப்டர்களைப் பயன்படுத்த உதவும் வகையில், அரசு துறைகள், ஹெலிபேட் ஆபரேட்டர்கள், ஹெலிகாப்டர் ஆபரேட்டர்கள் ஆகியோருக்கு தேவையான வழிகாட்டுதல்களை (Institutional Mechanism) டிட்கோ நிறுவனம்

உருவாக்கும். இந்த வழிகாட்டு முறையானது, NCAP (National Civil Aviation Policy) மற்றும் இந்திய அரசின் ஹெலிகாப்டர் கொள்கையின் கட்டமைப்பிற்குள் செயல்படும். ஹெலிகாப்டர் இயக்கத்திற்கான நிர்வாக வழிகாட்டியாக இருக்கும் "ஹெலி திஷா" (Heli Disha) மற்றும் ஹெலிகாப்டர் செயல்பாட்டிற்கு இணைய வழியில் அனுமதி வழங்குவதற்கான "ஹெலி சேவா" (Heli Sewa) இணையதளம் ஆகியவற்றின் தொடர்ச்சியாக இந்த வழிகாட்டுதல்கள் இருக்கும். இதன் மூலம், செயல்பாட்டில் இல்லாத ஹெலிபேடுகளை கண்டறிந்து, ஹெலிகாப்டர் ஆபரேட்டர்கள் மூலம் நகரங்களுக்கு இடையேயான வான்வெளி இணைப்பை மேம்படுத்த முடியும். இவ்வழிமுறையானது, தமிழ்நாட்டின் வான்வெளி தொழில் துறைக்கு வலிமை சேர்ப்பதுடன், பயன்பாட்டில் இல்லாத ஹெலிபேடுகளை பயன்பாட்டிற்கு கொண்டு வந்து, அதன் மூலம் நிதி திரட்டவும் தமிழ்நாட்டில் வான்வெளி போக்குவரத்தை மேம்படுத்தவும் பயன்படும்.

13) “ டைசல் உயிரியின் முகவரி” என்ற பெயரில் டைசல் புத்தாக்க மையம் சுமார் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் அமைக்கப்படும்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (TIDCO) உயிரி தொழில்நுட்ப மையமான டைசல் உயிரியல் தொழில் நுட்ப நிறுவனம் (TICEL Biopark Ltd) மூலம் “டைசல் உயிரியின் முகவரி” என்ற டைசல் புத்தாக்க மையத்தை (TICEL Innovation Hub) நிறுவி, அதன்மூலம் உயிரி தொழில்நுட்ப கல்வி, ஆராய்ச்சி, தொழில் நிறுவனங்களின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, திறன் மேம்பாடு, புத்தாக்கம் மற்றும் புத்தொழில் முனைவு போன்ற முயற்சிகளுக்கு ஆதரவாக செயலாற்ற உயிரி தொழில்நுட்ப முதன்மை கருவிகள் வசதி மையத்தின் (Biotechnology Core Instrumentation Facility-BTCIF) வாயிலாக, கூட்டு திறன் மேம்பாட்டு நிகழ்ச்சிகள் (Joint skill development programs), கூட்டு ஆராய்ச்சிகள் (Joint research), செயல்முறைப் பயிற்சி வகுப்புகள்

(Hands-on training programs), ஆகியவற்றை மேற்கொள்ள உள்ளது.

இந்த புத்தாக்க மையம், சுமார் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் டைசல் நிறுவனத்தின் நிதி, மாநில மற்றும் ஒன்றிய அரசுகளின் நிதி மற்றும் தொழில் நிறுவனங்களின் நிதி பங்களிப்புடன் உருவாக்கப்படும்.

14) தொழில் துறையின் கீழ் உள்ள பொதுத்துறை நிறுவனங்களின் திட்டங்களை விரைவாகவும், முழு செயல்திறனோடும், பொறுப்புணர்வோடும் செயல்படுத்தப்படுவதை உறுதி செய்ய, தலைமைப் பொறியாளர் அல்லது கண்காணிப்புப் பொறியாளர் தலைமையில் ஒரு பிரத்யேக பொறியியல் பிரிவு உருவாக்கப்படும்.

தொழில் துறையின் பொதுத்துறை நிறுவனங்களான, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO), டிட்கோவின் இணை நிறுவனமான டைடல் பார்க் நிறுவனம் (TIDEL PARK) மற்றும் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் (SIPCOT) தமிழ்நாடு தொழிலக வீட்டு வசதி நிறுவனம் (TNIHCL) ஆகிய நிறுவனங்கள் மூலம், நிதிநுட்ப நகரம் (Fintech City), புத்தாக்க தொழில் மையம் (Startup Hub), கனரக பொறியியல் மையம் (Heavy Engineering Hub), டைடல் பட்டாபிராம் (TIDEL Pattabiram), ஏரோ ஹப் (Aero Hub), தயார் நிலை தொழிற்கூடங்கள் (Plug-n-Play Facilities), டைடல்

மதுரை (TIDEL Madurai), இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் மினி டைடல்கள் (Mini TIDELs), தொழிலாளர் தங்கும் விடுதி, பெண்கள் தங்கும் விடுதி, திறன் மேம்பாட்டு மையங்கள் போன்ற பல்வேறு திட்டங்கள், மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்காக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தொழில் துறையின் கீழ் உள்ள பொதுத்துறை நிறுவனங்களின் திட்டங்களை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் செயல்படுத்தத் தேவையான எண்ணிக்கையிலான கோட்டங்களுடன், தலைமைப் பொறியாளர் அல்லது கண்காணிப்புப் பொறியாளர் தலைமையில் ஒரு பிரத்யேக பொறியியல் பிரிவு உருவாக்கப்படும். இந்தப் பிரிவை அமைப்பதன் மூலம், திட்டங்கள் விரைவாகவும், முழு செயல்திறனோடும், பொறுப்புணர்வோடும் செயல்படுத்தப்படுவது உறுதி செய்யப்படும்.

15) திருச்சிராப்பள்ளி மற்றும் சுற்றுப்பகுதிகளில் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியை மேம்படுத்த, 10 இலட்சம் சதுர அடியில், 600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தகவல் தொழில் நுட்பபூங்கா (டைடல்பார்க்) ஒன்று நிறுவப்படும்.

தமிழ்நாட்டின் மையப்பகுதியில் அமைந்துள்ள திருச்சிராப்பள்ளி மாவட்டம் மற்றும் அதன் சுற்றுப்பகுதிகளுக்கு தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் பலன்களை எடுத்துச் செல்லும் விதமாக திருச்சிராப்பள்ளி, பஞ்சப்பூர் பகுதியில் 10 இலட்சம் சதுர அடியில், சுமார் 600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளுடன் தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்று, டிட்கோ நிறுவனத்தின் இணை நிறுவனமான டைடல் பார்க் நிறுவனம் மூலம் படிப்படியாக அமைக்கப்படும். இதனால் 10,000 நபர்களுக்கு தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வேலை வாய்ப்பு உருவாக்கப்படும்.

16) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி மற்றும் நாமக்கல் மாவட்டம், இராசிபுரத்தில், 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மினி டைடல் பூங்காக்கள் அமைக்கப்படும்.

தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்ப சூழல் அமைப்பினை விரிவுபடுத்தும் வகையில், இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் 50,000 சதுர அடி முதல் 1,00,000 சதுர அடி பரப்பளவு கொண்ட மினி டைடல் பூங்காக்கள் நிறுவப்பட்டு வருகின்றன.

சிவகங்கை மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களைச் சார்ந்த இளைஞர்கள், தகவல் தொழில்நுட்பத் துறையில் வேலைவாய்ப்பு பெறும் வகையில் காரைக்குடி சிறப்பு நிலை நகராட்சியில்,சுமார் 35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மினி டைடல் பூங்கா அமைக்கப்படும். தகவல் தொழில்நுட்பம் சார்ந்த முதலீட்டை ஈர்க்கவும், இப்பகுதி, சமூக பொருளாதார வளர்ச்சி பெறவும் இத்திட்டம் வழிவகை செய்யும்.

பேருந்து மற்றும் சரக்கு வாகனங்களின் கட்டுருவாக்கம் மற்றும் கோழி வளர்ப்பு ஆகியவற்றிற்காக இந்தியா முழுவதும் பெயர்பெற்ற நாமக்கல் மாவட்டத்தில், பல புகழ்பெற்ற கல்லூரிகளும் அமையப் பெற்றிருக்கின்றன. இம்மாவட்டம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் படித்த இளைஞர்கள் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த துறையில் வேலைவாய்ப்பு பெறும் வகையில், இராசிபுரம் வட்டத்தில், சுமார் 35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மினி டைடல் பூங்கா ஒன்று அமைக்கப்படும்.

17) அரியலூர் சிமெண்ட் வளாகத்தில் இயங்கும் அரசு நகர் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் (AMHSS) உயிரியல் ஆய்வகம் மற்றும் இயற்பியல் ஆய்வுக்கூடம் உட்பட நான்கு வகுப்பறைகள் 1.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

டான்செம் 1980 ஆம் ஆண்டு முதல் அரசு நகர் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளியை நடத்தி வருகிறது. குழந்தைகளுக்காக சலுகைக் கட்டணத்தில் கல்வி வழங்குவதன் மூலம் அருகிலுள்ள கிராமங்கள் பயனடைகின்றன. தற்போது ஏசி ஷீட் கூரை கட்டிடத்தில் நான்கு வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றது. மேலும் உயிரியல், இயற்பியல் ஆய்வக கட்டிடம் இல்லை. ஏசி ஷீட் வகுப்பறையை RCC கட்டிடங்களாக மாற்றவும், தனித்தனி அறைகளில் உயிரியல் மற்றும் இயற்பியல் ஆய்வகம் 1.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

18) அரியலூர் சிமெண்ட் ஆலையில் இயங்கி வரும் டான்செம் மேல்நிலைப் பள்ளியில் ரூபாய் 30 இலட்சம் செலவில் உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய ஸ்மார்ட் வகுப்புகள் தொடங்கப்படும்.

அரியலூர் ஆலையில் இயங்கும் டான்செம் மேல்நிலைப் பள்ளியில் ஒன்பது முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு 30 இலட்சம் ரூபாய் செலவில் ஸ்மார்ட் வகுப்புகள் தொடங்கப்படும்.

19) அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலை வளாகத்தைச் சுற்றி 3,400 மீட்டர் நீளம் புதிய வளாகச் சுவர் 4 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலை வளாகச் சுவரின் மொத்த நீளம் சுமார் 5,000 மீட்டர் ஆகும். ஏறக்குறைய 1,600 மீட்டர் ஏற்கனவே கட்டப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. மீதமுள்ள 3,400 மீட்டர் வளாகச்சுவர் மிகவும் சேதமடைந்த நிலையில் உள்ளதால் புதிய வளாகச்சுவர் 4 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

20) அரியலூர் சிமெண்ட் ஆலையில் ஆனந்தவாடி மற்றும் கல்லங்குறிச்சி சுரங்க குத்தகை எல்லையை ஒட்டி இரும்பு முள்வேலி, மூடிய மின்சுற்று தொலைக்காட்சி கருவிகள் (சி.சி.டிவி. கண்காணிப்பு கேமரா / கருவி) 1.50 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

அரியலூர் சிமெண்ட் ஆலையில், ஆனந்தவாடி சுரங்கம் மற்றும் கல்லங்குறிச்சி சுரங்கம் 55.81 கிலோ மீட்டர் சுற்றளவு கொண்டுள்ளது. அனுமதியின்றி வெளிநபர் யாரும் சுரங்கத்திற்குள் நுழைந்து விபத்து நிகழ்வதை தடுக்கவும், சுண்ணாம்புக்கற்கள் திருடப்படுவதைத் தடுப்பதற்கும் முதற்கட்டமாக 26.63 கிலோ மீட்டர் சுரங்கக் குத்தகை எல்லையைச் சுற்றி 1.50 கோடி ரூபாயில் பாதுகாப்பு இரும்பு முள்வேலி மற்றும் மூடிய மின்சுற்று தொலைக்காட்சி கருவிகள் (சி. சி. டிவி. கண்காணிப்பு கேமரா / கருவி) அமைக்கப்படும்.

## 21) டான்செம் நிறுவன வள திட்டமிடல் (ERP) 5.20 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

நிறுவன வள திட்டமிடல் (ERP) என்பது ஒரு வகையான மென்பொருள் அமைப்பாகும். இது நிறுவனங்களின் சிறந்த செயல்திறனுக்காக முக்கிய வணிக செயல்முறைகளை தானியங்குபடுத்தவும் நிர்வகிக்கவும் உதவுகிறது. தற்போதுள்ள (ERP) - Database (Oracle 11g), Oracle Application Server and Programming Language (Java, Servlet, JSP) 10 ஆண்டுகளுக்கும் மேலான பழைய பதிப்பு ஆகும். எனவே புதிய சர்வருடன் எளிய மற்றும் பாதுகாப்பான அம்சங்களுடன் அனைத்து சமீபத்திய E R P அம்சங்கள் மற்றும் தனிப்பயன் தேவைகளை உள்ளடக்கியதன் மூலம் புதிய பதிப்பிற்கு (Linux, Apache, MYSQL, PHP-LAMP) 5.20 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

22) ஆலங்குளம் சிமெண்ட் ஆலையில் 1.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விருந்தினர் மாளிகை, ஆய்வகம், விற்பனை மற்றும் கணக்குத்துறை கட்டிடங்கள் மற்றும் பணியாளர் குடியிருப்பு புதுப்பிக்கப்படும்.

டான்செம் ஆலங்குளம் சிமெண்ட் ஆலையின் விருந்தினர் மாளிகை கட்டிடம் 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், ஆய்வக அறை கட்டிடம் 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், விற்பனை பிரிவு, கணக்கு பிரிவு மற்றும் விற்பனை கணக்கு பிரிவு கட்டிடங்கள் 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், மற்றும் ஆலை பணியாளர் குடியிருப்புகள் 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் ஆக மொத்தம் 1.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும்.

**தங்கம் தென்னரசு**
தொழில் துறை அமைச்சர்

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை - 600 001.